1st September 1959]

the Government think of the possibility of introducing identity cards along with photographs affixed to them so as to prevent misuse of voting in the elections?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir, that is the system which is being tried now at Calcutta. If that experiment is found to be successful, it will be extended to other cities.

SRI S. M. ANNAMALAI : இந்த வாக்குச் சீட்டுக்களில் குறிபோடும் முறை சிறு கிராமங்களில் உள்ள மக்களுக்குத் தெரிவதில்லை ; தெரியாத காரணத்தால் அதிகமான வோட்டுக்கள் செல்லுபடியாகாமல் போகின்றன. ஆகவே, இந்த முறையை நகரப் புறங்களில்மட்டும் புகுத்த வேண்டுமென்று இந்தச் சர்க்கார் தேர்தல் குழுவினருக்குத் தெரியப்படுத்துமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : செல்லுபடியாகாத வோட்டுக்கள் அதிகமாக இருக்கவில்லை. மிகக் குறைவாகத்தான் இருந்தன. கல்வி யறிவு இல்லாதவர்கள் இருக்கும் பகுதிகளில் மட்டுந்தான் செல்லுபடி யாகாத வோட்டுக்கள் இருந்தன என்பது அல்ல. படித்துப் பட்டம் பெற்ற வர்கள் வோட்டுப் போட்டபோதும், இதைவிட அதிகமான செல்லுபடி யாகாத வோட்டுக்கள் இருந்தன.

SRI C. R. RAMASWAMI: May I know whether in Calcutta these identity cards are being issued with photographs?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir.

SRI K. VINAYAKAM: What would be the expenditure that would be involved if identify cards with photographs are introduced? Would it be a huge expenditure when compared to the expenditure that is now being incurred by the Government?

THE HON. SRI C. SUBRAMANIAM: In any event it will be extra expenditure. I think a rough calculation has been made and it may cost about six to eight annas per voter.

SRI A GOVINDASAMI : வோட்டுச்சீட்டிலே குறிபோடுகிற முறை வரும் போது முத்திரை இடப்படலாமா ? அல்லது பென்சிலாலே குறிபோடுகிற நிலைமை இருக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: The question as to what system of voting should be adopted in the coming general elections has not yet been decided by the Election Commission.

SRI V. SANKARAN : இந்தத் திட்டம் வெற்றிகரமாக இருந்தால், நம் முடைய ராஜ்யத்தின் முக்கிய நகரங்களிலாவது இந்தத் திட்டம் கண்டிப் பாக அமுலாக்க வேண்டுமென்று சிபார்சு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுதான் சர்க்காருடைய உத்தேசம், நம்முடைய ராஜ்யத்திலும் முக்கியமாக சென்னை நகரம், திருச்சி, மதுரை, கோயமுத்தூர், சேலம் ஆகிய பெரிய நகரங்களிலாவது எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது.

Village Officers

* 51 Q.—SRI P. G. MANICKAM : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கிராம உத்தியோகஸ்தர்களின் உத்தியோகம், ஊதியம் போன்ற வைகளிலே மாறுதல் செய்வது சம்பந்தமாக அரசாங்கத்தாரால் பரிசீலனை செய்யப்பட்டு எடுத்த முடிவுகளின் விவரங்கள் யாவை ?

[1st September 1959

(ஆ) அவை எப்போது அமுலுக்குக் கொண்டு வரப்படலாம் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) The matter is still under the consideration of the Government.

(ஆ) Does not arise.

SRI P. G. MANICKAM : கனம் சபாநாயகர் அவர்களே, மந்திரிசபை உப கமிட்டி நியமிக்கப்பட்டு இரண்டு மூன்று வருஷங்கள் ஆகின்றன. இன்னும் இதற்கு ஒரு முடிவு ஏற்படாமல் இருப்பதால், கூடியசீக்கிரம் இதற்கு ஒரு முடிவு ஏற்படுவதற்குச் சர்க்கார் பரிசீலனை செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தப் பிரச்னையை ஆராயும் போது புதுப் புதுச் சிக்கல்கள் எல்லாம் ஏற்படுகின்றன. ஆகையால் இதைத் தீர ஆராய்ந்து பார்த்து சரிவர நன்ருகச் செய்யவேண்டுமென்பது உத்தேசம்.

(ஸ்ரீ எம். பி. சுப்பிரமணியம் எழுந்தார்.)

MR. SPEAKER : 'பரிசீலனையில் இருக்கிறது ' என்று அமைச்சர் பதில் சொல்லிய பிறகு கனம் அங்கத்தினர் என்ன கேட்கப் போகிருர் ?

SRI M. P. SUBRAMANIAM : நம்முடைய ராஜ்யத்தில் என்.ஜி.ஓ.க்களுக்கான சம்பள விகிதங்களைப்பற்றி ஆராய்ந்து சிபார்சு செய்ய கமிஷன் ஒன்று நியமித்திருக்கிருர்களே, அவர்கள் அறிக்கை சமர்ப்பிக்கிற சந்தர்ப்பத்திலே கிராம உத்தியோகஸ்தர்களுடைய குறைகளும் கவனிக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தப் பிரச்னையிலே சம்பள விகிதம் மாத்திரம் அல்ல. மற்ற பல விஷயங்களெல்லாம் இருக்கின்றன. ஆகையால், இந்தக் கமிஷனுக்கும் இதற்கும் ஒன்றும் சம்பந்தம் இருப்பதாகச் சொல்லமுடியாது.

SRI K. R. NALLASIVAM : நீண்ட நாட்களாக இது யோசனையில் இருந்துகொண்டிருக்கிறது. இதில் இருக்கும் அடிப்படையான சிக்கல் என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அடிப்படைச் சிக்கல்கள் என்னவென்ருல் பரம்பரை பாத்தியதை இருக்கிறது. அதை எடுத்துவிட்டுப் புதிதாகச் செய்தால் சம்பளம் ஜாஸ்தி கொடுக்கவேண்டும். சம்பளம் கொடுத்தால், எப்படிக் கொடுக்கிறது, ட்ரான்ஸ்பர் உண்டா என்று இம்மாதிரி பல விஷயங்கள் இருக்கின்றன.

Oil resources

* 52 *Q*—SRI A. VEDARATNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ரஷ்யா அனுப்ப இருக்கும் எண்ணெய்த் தொழில் நிபுணர்களும் யந்திர சாதனங்களும் இம் மாநிலத்தில் எண்ணெய் வள ஆராய்ச்சிக்குக் கிடைக்குமா ?

(ஆ) எண்ணெய்த் தொழில் அபிவிருத்தி சம்பந்தமாக, மே மாதம் இந்தியா வந்த ரஷ்ய மந்திரி ஸ்ரீ அன்ட்ராபோல் கவனத்திற்கு இவ்விஷயம் கொண்டு வரப்பட்டதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Investigation on the oil resources of this State is being conducted by the Central Government through the Oil and Natural Gas Commission, Dehra Dun. If assistance from the Soviet erperts is required in oil exploration work in this State, the Commission will no doubt arrange for it.